විභාග අංකය/சுட்டிலக்கம்

……………………………………

# அரசகரும மொழிகள் திணைக்களம்

## அரச ஊழியர்களுக்கான மொழித் திறன்காண் பரீட்சை
## தமிழ் மொழி (மட்டம் I) பேச்சு
## எல்லாத் தரங்களுக்குமான பூர்வாங்க மட்டம்

## வினாப்பத்திரம் 2

## 15.03.2008

**நேரம் : மூன்று மணித்தியாலங்கள்**

1. பின்வரும் சொற்களில் எழுத்துப் பிழை இல்லாத சொற்களின் கீழ் கோடிடுக.

விமாணம், கதிரை, சூறியன், சந்திறன், தாவரம், வெந்நீர், கோழி, கோளி, குதிறை, வெள்ளம்.

………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………
………………………………………………………………………………………

2. பின்வருவனவற்றுள் பிழைகள் எதுவும் இல்லாத வாக்கியங்களின் கீழ்க் கோடிடுக.

(i) நாங்கள் நேற்று வந்தினம்.
நாங்கள் நேற்று வந்தேன்.
நாங்கள் நேற்று வந்தோம்.
நாங்கள் நேற்று வருவோம்.

(ii) அவர்கள் மீண்பிடித் தொழிலாளர்.
அவர்கள் மீன்பிடித் தொழிலாளர்.
அவர்கள் மீன்பிடித் தொளிலாளர்.
அவர்கள் மீன்செய் தொழிலாளர்.

(iii) நாளை திருவிழா நடைபெறும்.
நாளை திருவிலா நடைபெறும்.
நாளை திருவிழா நடைபெற்றது.
நாளை திருவிழா னடக்கும்.

(iv) கீதாவின் குரல் இணிமையானது.
கீதாவின் குறள் இனிமையானது.
கீதாவின் குறல் இனிமையானது.
கீதாவின் குரல் இனிமையானது.

(v) வானத்தில் விமானம் பரக்கிறது.
வானத்தில் விமாணம் பறக்கும்.
வானத்தில் விமானம் பறக்கிறது.
வாணத்தில் விமானம் பறக்கும்.

3. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

**உதாரணம்:** நன்மை → தீமை

(அ) மேடு ..............................
(ஆ) உண்மை ..............................
(இ) செயற்கை ..............................
(ஈ) இளமை ..............................
(உ) உயர்வு ..............................

4. அடைப்புக் குறிகளுக்குட் கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து பொருத்தமான சொல்லையோ, சொற்றொடரையோ தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.

(i) 50 ஆண்டு கால நிறைவினைக் கொண்டாடும் விழா ………….. எனப்படும். (பவளவிழா, வெள்ளிவிழா, பொன்விழா, பெருவிழா)

(iii) தாய்தந்தை உற்றார் உறவினர் எவரும் இல்லாதவர் ………………… எனப்படுவார். (பிச்சைக்காரன், அகதி, அனாதை, ஞானி)

(iii) ‘கை கொடுத்தல்’ என்னும் மரபுத் தொடர் உணர்த்தும் பொருள் ……………………… (வீணாகப் பாடுபடுதல், கையைக் கழுவுதல், உதவி செய்தல், கையை நீட்டுதல்)

(iv) ‘மின்னுவதெல்லாம் பொன்னல்ல’ என்ற பழமொழி உணர்த்தும் பொருள் ………………………….. (பொன்னாலான ஆபரணம் மின்னுவதில்லை, வெளிப்பகட்டைக் கண்டு மயங்கக்கூடாது, வாழ்வு மின்னலைப் போல் மறையும், மின்னுவது பொன்னாகவே இருக்கும்)

(iv) நிலையற்ற தன்மையைக் குறிக்கும் உவமைத் தொடர் ………………… (பூவும் மணமும்போல, ஓடும் புளியம்பழமும் போல, காட்டுத் தீப்போல, நீர்க்குமிழி போல)

5. பின்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக.

(i) கோழி + கூடு = …………………………..
(ii) காய் + கறி = …………………………..
(iii) பால் + சோறு = …………………………..
(iv) மணி + கூடு = …………………………..
(v) பாடம் + புத்தகம் = …………………………..

6. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.

(i) பூமாலை …………………………….
(ii) தயிர்ச்சட்டி ……………………………..
(iii) மரவேர் ……………………………..
(iv) கோழிக்குஞ்சு ……………………………..
(v) கடலலை ……………………………..

7. பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினைவாக்கியங்களாக மாற்றி எழுதுக.

**உதாரணம்:** அவன் படம் வரைந்தான் → படம் அவனால் வரையப்பட்டது.

(i) அவன் புல் வெட்டினான். ....................................................

(ii) அரசன் நாட்டை ஆண்டான். ....................................................

(iii) அவனது பணத்தைக் கள்வன் திருடினான். ..................................

(iv) நான் தம்பியை அடித்தேன். ....................................................

(v) மார்ட்டின் விக்கிரமசிங்க ‘கம்பெரனிய’ என்ற நாவலை எழுதினார்.

.............................................................................................

8. பின்வரும் தனிவாக்கியங்களைச் சேர்த்துத் தொடர் வாக்கியங்களாக எழுதுக.

**உதாரணம்:** பள்ளியில் மணி அடித்தது.
மாணவர்கள் வீடு சென்றார்கள்.
→ பள்ளியிலே மணியடித்ததும் மாணவர்கள் வீடு சென்றார்கள்.

(i) இலங்கை ஒரு சிறிய தீவு.
இங்கு சிங்களமும் தமிழும் பேசப்படுகின்றன.

.............................................................................................

(ii) ஒரு மனிதன் தெருவழியே சென்றான்.
அப்போது அவன் விபத்தில் சிக்கினான்.

.............................................................................................

(iii) குழந்தைக்குப் பசித்தது.
அதனால் அது அழுதது.

.............................................................................................

(iv) இராவணன் இலங்கையை ஆண்டான்.
அவன் ஒரு சிவ பக்தன்.

.............................................................................................

(v) வறுமை ஒரு நோய்.
அதுவே எல்லா நோய்களுள்ளும் கொடுமையானது.
.............................................................................................

9. சரியான விடைகளை அடைப்புக்குறிகளுக்குள்ளிருந்து தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

(i) அடித்துக் கொண்டிருந்த காற்று ஓய்ந்தது. இவ்வாக்கியத்தில் வினைமுற்று …………………….. (அடி, இருந்தது, காற்று, ஓய்ந்தது)

(ii) அந்தி நேரத்தில் ஆனந் பன்சலவுக்குப் போவதைக் கண்டேன். இவ் வாக்கியத்தின் எழுவாய் ……………….. (ஆனந், நான், பன்சல, அந்தி)

(iii) மலர்களிலிருந்து வந்த மணம் எங்கும் பரந்தது. இங்கு '**மணம்**' என்பதன் ஒத்த கருத்து …………………… (திருமணம், வண்டு, வாசைன, குணம்)

(iv) ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வரும் ஒரு சொல் ……………….. (மனிதன், சிறுமி, நீதிபதி, மாடு)

(v) பெயராகவும் வினையாகவும் வழங்கும் ஒரு சொல் …………………….. (வாய், ஓடு, நில், மரம்)

(vi) நாய் குரைக்கும் என்பது போல் காகம் ……………………… (அகவும், சீறும், கரையும், கூவும்)

(vii) கோழிக்குக் குஞ்சு என்பதுபோல் பூனைக்கு ………………….. (குட்டி, பிள்ளை, கன்று, குருளை)

(viii) பசுவின் பெண்பாற் பெயர் நாகு. யுானையின் பெண்பாற் பெயர் …………………… (குட்டி, பெட்டை, பிடி, பிணை)

(ix) வாழை இலை என்பது போல் பனை …………………… (தாள், ஓலை, இலை, சினை)

(x) ஜலம் என்ற வடமொழிச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச்சொல் …………….. (நீர், கண்ணீர், பன்னீர், சுடுதண்ணி)

10. பின்வரும் சொற் கூட்டங்களில் வித்தியாசமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடு இடுக.

(i) தோசை, கோப்பி, இட்லி, அப்பம்

(ii) அக்கா, அரசன், அண்ணா, அம்மா

(iii) கட்டில், மேசை, படித்தான், விளக்கு

(iv) நிறம், நீலம், பச்சை, சிவப்பு

(v) காகம், புறா, மான், மயில்

11. பொருத்தமான சொல்லை அடைப்புக் குறிகளுக்குள்ளிருந்து தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.

(i) சிறப்பாகச் செயலாற்றிய ஊழியரைத் திணைக்களத் தலைவர் ...........
(பாராட்டும், பாராட்டினர், பாராட்டினான், பாராட்டினார்)

(ii) ரஞ்சித் பாட்டுப் பாட ஆனந்தி நடனம் ..........................
(ஆடிவிடும், ஆடினாள், ஆடியது, ஆடினார்கள்)

(iii) பொலீஸார் உடற்பயிற்சியில் .....................................
(இறங்கினர், ஈடுபட்டது, ஈடுபட்டன, ஈடுபட்டனர்)

(iv) இன்று அமைச்சின் செயலாளர் வந்தாலும் ..........................
(வருவார், வரும், வந்துவிடும், வரமாட்டார்)

(v) தாய் தாலாட்டுப் பாட குழந்தை .......................................
(உறங்கான், உறங்கினான், உறங்கியது, உறங்கினாள்)

12. பின்வரும் உரைப்பகுதியை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. பலர் கூடிச் சமூகமாக வாழவேண்டிய நியதி இயற்கையாக மனிதனுக்கு ஏற்பட்டுள்ளது. ஆதிமனிதன் குகைகளில் விலங்குகள் போல் வாழத் தொடங்கிய கால முதலாகவே அவன் சமூக வாழ்க்கை நடாத்தக் கற்றுக் கொண்டான். ஒருவருக்கு மேற்பட்டோர் ஒரு குழுவாக வாழ முயலும் போது, சிலபல சட்டதிட்டங்களை வகுத்து அவற்றுக்கு அமைந்து ஒழுக வேண்டியது இன்றியமையாதது. பெரும்பாலும் ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவன் இருப்பான்; சட்டதிட்டங்களை வகுப்பதிலும் செயற்படுத்துவதிலும் குழுத்தலைவனுக்குப் பெரும் பங்கு உண்டு. இந்த ஒழுங்கமைப்பே சட்டம் என்பதொன்று உருவாகுவதற்கு ஏதுவாயிற்று.

குழுத்தலைவனது இடத்தை அரசன் பெற்றுக் கொண்ட கால முதல், அரசனே சட்டத்துக்குக் கருத்தாவாகவும் காவலனாகவும் அமைந்தான். சுமூகம் விரிவடைய மக்களுக்கும் மக்களுக்குமிடையிலும், மக்களுக்கும் அரசனுக்கு மிடையிலும் இருந்த தொடர்புகள் சிக்கலாகி வந்தன. இச்சிக்கல்களை யெல்லாம் தீர்க்க அவ்வப்போது அரசனும் அரசாங்கத்தாரும் முடிவுகள் செய்தனர். காலப்போக்கில் இவை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என நூல்களில் விரித்துக் கூறப்படலாயின. இவற்றைக் கூறும் நூல்கள் அறநூல்கள் அல்லது தருமசாத்திரங்கள் எனப்பட்டன. இந்திய சமுதாயத்தில் மனு என்னும் மன்னனே முதலாவதாக இச்சட்டங்களை முறையாக வகுத்துத் தந்தான். அவனுடைய சட்டம் மனுநீதியென்று வடநாட்டிலும் தென்னாட்டிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(i) மனிதன் ஒரு சமூகப்பிராணி எனக் கருதப்படுவது ஏன்?

.......................................................................................

(ii) மானிடர் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் சட்டங்களை உருவாக்கியவன் யார்?

.......................................................................................

(iii) மன்னர் சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ளக் காரணமாக இருந்தது யாது?

.......................................................................................

(iv) அறநூல்களில் விவரிக்கப்பட்ட விடயங்கள் யாவை?

……………………………………………………………………………………..

(v) '**மனுநீதி**' எனப்படுவது யாது?

13. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சேவை உணர்ச்சி புகுத்தப் பெற்றால் தான் வாழ்க்கை தன் உன்னத நோக்கத்தை நிறைவேற்றுகிறது. அன்பும் தியாகமும் உள்ள வாழ்வின் நறுமணமே சேவை. வாழ்க்கையே ஒரு முயற்சியாகலின் வேலை செய்வதே வாழ்க்கையின் உண்மை இயல்பு. தொழில் அன்பினால் ஊக்கப் பெற்றான். அத் தொழிலே அன்பாலும் கருணையாலும் செய்யும் தொழிலாகும். இப்படிச் செய்யும் தொழில் வாழ்வை விடுதலை அடையச் செய்து அதை நித்திய இன்பத்தால் நிறைக்கும். அன்பே கடவுள், கடவுளே அன்பாகலின், உனது வாழ்வின் செயல்களனைத்தையும் தூய அன்பின் காணிக்கையாக, அன்பு பூர்த்தி யடைவதற்காகவே செய்யவேண்டும். தாய் தன்னலமில்லாத அன்பினால், சேவையின் ஆனந்தத்துக்காகவே தன் குழந்தையின் சேவையில் ஈடுபடுகிறாள். இந்தச் சேவை பிரதிபலனைக் கருதாது சேவை செய்வதிலேயே திருப்தி ஏற்படுகிறது. அதனால், சேவையிலே வாழ்வின் மேலான இன்பம் நிலவுகிறது. தனது குழந்தைக்கு அன்னையைக் கருத்தோடு பூரண சேவை செய்ய ஏவும் அன்பின் சக்தி, வாழ்க்கையிலே உலக முழுவதற்காகவும் செய்யும் செயல்களிலே புகுந்தால், வாழ்வு உண்மையான விடுதலையும், அனைவர்க்கும் செய்யும் இன்பகரமான சேவையும் அடங்கியதாக இருக்கும்.

(i) வாழ்க்கையின் நோக்கம் என்ன?

……………………………………………………………………………………..

(ii) தொழில் எவ்வாறு சேவை ஆகின்றது?

……………………………………………………………………………………..

(iii) எமது செயல்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

……………………………………………………………………………………..

(iv) தாய் குழந்தைக்குச் செய்யும் சேவை எத்தகையது?

……………………………………………………………………………………..

(v) வாழ்க்கையில் உண்மையான விடுதலை எப்போது ஏற்படுகின்றது?

……………………………………………………………………………………..

14. பின்வரும் பகுதிகளைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க:

(i) எமது சமூகக் கேடுகளுள் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பயங்கரமானது. இது விசித்திர தீமையாகச் சமீபத்தில் நிலைத்து விட்ட தென்று தோன்றுகிறது. தொழிலற்று இருப்பது, ஒருவர் தாம் சாதாரண வாழ்க்கையிலிருந்தும் விலகியவர் என்ற உணர்வை அவரிடம் கிளப்புகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் தரும் கேடுகளுள் இதுவே மிகவும் கொடியதாகும். அவர்களின் உடல் தேவைகளை எவ்வளவு தான் நிறைவு செய்தாலும் இதன் கொடூர இன்னல்கள் தீர்ந்தபாடில்லை. மனிதனுக்குச் சேவை செய்யத் தருணம் வாய்க்காததால், அவன் ஊர் சுற்றுபவனாகவும் தன்னலம் கருதுபவனாகவும் மாறுகின்றான்.

(ii) ஒக்ஸ்பேர்ட் ஆங்கில அகராதி மொழிபெயர்ப்பு என்ற பதத்தை ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு மாற்றுதல் என்றே வரையறுக்கின்றது.

ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு மொழிபெயர்க்கப்படும் மொழியில் புலமையும், பெயர்க்கப்படும் மூல மொழியறிவும், பெயர்க்கப்படும் பொருளைப் புரிந்து தெளிவாக கையாளும் ஆற்றலும் இன்றியமையாத தகுதிகளாகின்றன. சங்கீதம், ஓவியம் போன்ற கலைகளைப் போல் மொழிபெயர்ப்புக்கும் சட்டதிட்டங்கள், மரபுகள், வரையறைகள் உள்ளதுடன் நீண்ட காலப் பயிற்சியும் இப்பணிக்கு அவசியப்படுவதால் இதுவும் ஒரு கலையாகக் கருதப்படுகின்றது.

மொழிபெயர்ப்புகள் மூலத்தையொட்டிப் படிப்பதற்கு இன்மையாகவும், தெளிவாகவும், மூலத்தின் தன்மை குன்றாமலும், இயல்பாகவும் இருக்க வேண்டும். அதாவது மூலத்தின் சிறப்புக்கள் யாவும் மொழிபெயர்ப்புடன் மிளிர வேண்டும். அதனிடையே மூல ஆவணத்தின் உயிர்ப்பு, விறுவிறுப்பு நன்கு பிரதிபலிக்கவும் வேண்டும். மூல மொழிச் சொற்கள் கருத்துக்களை பொருள் சிதைவின்றியும், உணர்வு மாற்றமின்றியும் குறிக்கோள் மொழியில் வழங்குவதில் மட்டும் மொழிபெயர்ப்பாளரின் வெற்றி தங்கியிருப்பதில்லை. அதனைப் படிப்போர் மனதில் ஏற்படும் தாக்கமும் திருப்தியும் மிகவும் பிரதானமானவை. அன்றேல், அவை சமுதாயத்தில் தாக்கம் செலுத்தும் திராணி பெறமாட்டா.

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

15. பின்வரும் பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்க்க:

(i) රජයේ පාසල්වල ගොවිපොළවල් නිර්මාණය කිරීම සඳහා රුපියල් මිලියන 2.5ක මුදලක් වෙන්කර තිබේ.

අපි වවමු - රට නගමු වැඩ පිළිවෙළට සමගාමීව මෙම පාසල් කෘෂිකාර්මික ගොවිපොළ නිර්මාණය කෙරෙන අතර මේ යටතේ පාසල් භූමියේ ප්‍රයෝජනයට නොගෙන ඇති සෑම භූමියකම වගා කටයුතු සිදු කෙරේ. එසේම පාසල් ගෙවතු අලංකාරයට ද මෙම වගා වැඩපිළිවෙළින් පිටිවහලක් ලැබේ.

පාසල් ගොවිපොළක් නිර්මාණය කිරීමේ කටයුතු කෘෂි නාශක හා රසායනික පොහොර භාවිතයෙන් තොරව සිදු කෙරෙන අතර සෑම වගාවක්ම පාසල් සිසුන්ගේ උපරිම සහභාගීත්වය ඇතිව සිදු කිරීමට කටයුතු සකස් කොට ඇත.

(ii) මානව සම්පත් සංවර්ධනයෙහි ලා වැදගත් අංශයන් දෙකක් සේ සැලකෙන අධ්‍යාපනය සහ සෞඛ්‍යය මූලික වශයෙන් රජයේ වගකීම් යටතේ තිබිය යුතු යැයි පිළිගැනෙන අතර එයින් සැලකිය යුතු කොටසක් පෞද්ගලික අංශය විසින් දැරීම සඳහා අවශ්‍ය දිරිගැන්වීම සපයනු ලැබේ. සෞඛ්‍යය සහ අධ්‍යාපනය සඳහා වෙන් කෙරෙන සම්පත් ප්‍රමාණය ක්‍රමයෙන් වැඩි කිරීමට රජය තීරණය කොට ඇත. එහෙත් ඒ සමඟම එම සම්පත් කළමනාකරණය කිරීමද දියුණු කළ යුතු වේ. එබැවින්, අධ්‍යාපනසහ සෞඛ්‍යය කටයුතු කළමනාකරණය දියුණු කිරීමේ පරමාර්ථයෙන් විදේශාධාර ලබන ව්‍යාපෘති ද අරඹා ඇත.

(i) There are several possible ways of classifying cheese, no one of which seems satisfactory for all purposes. For one purpose it may be more desirable to classify them according to methods of making; for another purpose the characteristics of the cheese may be more satisfactory. One common classification recognizes three groups – soft, semi hard and hard. This grouping, however, is based almost entirely on the texture of the product when it is ready for consumption. In general the soft cheeses are those made by souring the milk with lactic acid' they tare eaten within few days after making. The hard cheese are those made by coagulating the protein with rennet, cooking and pressing the curd and ripening with moulds or bacteria for several months or several years before they are ready to be eaten. Semi hard cheese fall between these two groups, and the process may have features in common with both.

(ii) Sri Lanka is a small island nation, with little arable land to share for her growing affluent population. She should therefore consider her land precious and sacred. This preciousness should come in terms of higher monetary value given to rural and agricultural land.

Tighter governmental control of land prices especially in the rural and agricultural areas should escalate land prices, thus curbing haphazard and widespread housing developmental schemes on our valued agricultural and forestry land.

With environmental, ecological and the agriculture industry in mind, procedures should be set up by the authorities to advise and influence potential

developers and buyers on the most suitable and constructive methods for rural and sub rural/ suburban developments. While housing is essential to the growing population needs, with the smallness in size of each modern individual family unit, houses should be constructed accordingly and with the greater goal of the country's overall development in mind.

Most empathically in the rural or sub rural developmental areas, housing could thus be extended skywards into multi story apartment living. Terraced, or at its largest level, semi- detached units; city – like dwellings in the midst of nature and ecology.